கவனம் செலுத்தி, அந்த இடத்திலே புதியதாக துணை மின்நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவுபடுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

151—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***25302—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, வட்டமலை, காந்தி நகர், கத்தேரி நாடார் தெரு, அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, வட்டமலை, காந்தி நகர் குடியிருப்புக்கு 2010 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவேரி குடிநீரும் மற்றும் தனி மின் விசை திட்டத்திலிருந்து ஆழ்துளைக் கிணற்று நீரும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கத்தேரி ஊராட்சி, கத்தேரி குடியிருப்பில் உள்ள நாடார் தெரு மற்றும் அருந்ததியர்

தெரு பகுதிகளுக்கு 1998 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவேரி குடிநீரும் மற்றும் தனி மின் விசை திட்டத்திலிருந்து ஆழ்துளைக் கிணற்று நீரும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் நிறைவான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதிகளுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இடங்கணசாலை பகுதியில் நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, அதன்மூலம் பேரூராட்சிப் பகுதியிலுள்ள 74 மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. ஆனால், நீரேற்றம் செய்யப்படும்போது பாதியளவு மேல்நிலைத் தொட்டிகளுக்குக்கூட குடிநீர் செல்வது கிடையாது. அதனால் பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடங்கணசாலை நீர்மட்டத் தொட்டியிலிருந்து தனி குடிநீர் லைன் அமைத்து கே.கே. நகர் பகுதியில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, அதன்மூலம் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் குடிநீர் சீராக விநியோகம் செய்ய ஆவன செய்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்தேரி ஊராட்சியினுடைய மொத்த மக்கள் தொகை 8,145. இதில் ஏற்கெனவே வட்டமலை பகுதிகளுக்கும், நாடார் தெருவிற்கும் நிறைவான குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதோடு, அருந்ததியர் தெருவிற்கு இப்பொழுது 60 ஆயிரம்

2013 ஏப்ரல் 5]

லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கட்டி முடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் வாயிலாகவும் குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் துட்டம்பட்டியில் நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, அதன்மூலம் தாரமங்கலம் ஒன்றியத்திலுள்ள 17 ஊராட்சிகளிலுள்ள சுமார் 300 மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. ஆனால், நீரேற்றம் செய்யப்படும்போது, சுமார் 100 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மட்டுமே நீரேற்றம் செய்ய முடிகிறது. மீதமுள்ள 200 மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்ய முடிவதில்லை. இதனால், தாரமங்கலம் ஒன்றியப் பகுதி மக்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மேற்கொண்டு ஒரு பிரதான குடிநீர் லைன் அமைத்து, தாரமங்கலம் ஒன்றியப் பகுதியில் புதிதாக மேலும் ஒரு நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, அதன்மூலம் அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் நீரேற்றம் செய்து, தாரமங்கலம் ஒன்றியப் பகுதியில் உள்ள 17 ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஏற்கெனவே சொன்னதுபோல், இந்தப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு இருக்கின்றது. அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

பல்வேறு நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நிறைவான தண்ணீர் செல்லவில்லையென்று கூறுகிறார். அதை ஆய்வு செய்து, நிறைவான தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

154—

மூலிகை ஆராய்ச்சி மையம்

***14689—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, அய்யனார்கோயில் மலைப் பகுதியில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அய்யனார்கோயில் மலைப் பகுதி அரிதான சாம்பல் நிற அணில்கள் வாழும் வன உயிரினக் காப்பகமாக அறிவிக்கப்பட்ட பகுதி என்பதால், மூலிகை தாவரங்கள் சேகரம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் ஆராய்ச்சிக் கூடம் மற்றும் கட்டடங்கள் கட்ட இயலாது. மூலிகை ஆராய்ச்சி மையம் வனப் பகுதியின் உள்ளே அமைவது உகந்ததாக அமையாது. எனவே, ராஜபாளையம் தொகுதி அய்யனார்கோயில் மலைப் பகுதிகளில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு*